## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 2-6 - நண்ணாத
## (திருக்கடல்மல்லை 2)

1098 * நண்ணாத வாள் அவுணர் * இடைப் புக்கு * வானவரைப்
பெண்ணாகி * அமுதூட்டும் பெருமானார் ** மருவினிய
தண்ணார்ந்த கடல்மல்லைத் * தலசயனத்து உறைவாரை *
எண்ணாதே இருப்பாரை * இறைப்பொழுதும் எண்ணோமே 1

1099 பார்வண்ண மடமங்கை * பனி நன்மாமலர்க் கிழத்தி *
நீர்வண்ணன் மார்வத்தில் * இருக்கையை முன் நினைந்து அவனூர் **
கார்வண்ண முது முந்நீர்க் * கடல்மல்லைத் தலசயனம் *
ஆர் எண்ணும் நெஞ்சுடையார் * அவர் எம்மை ஆள்வாரே 2

1100 * ஏனத்தின் உருவாகி * நிலமங்கை எழில் கொண்டான் *
வானத்தில் அவர் முறையால் * மகிழ்ந்து ஏத்தி வலங்[1] கொள்ள **
கானத்தின் கடல்மல்லைத் * தலசயனத்து உறைகின்ற *
ஞானத்தின் ஒளி உருவை * நினைவார் என் நாயகரே 3

1101 விண்டாரை வென்று ஆவி * விலங்குண்ண மெல்லியலார் *
கொண்டாடும் அல்லகலம் * அழலேற வெஞ்சமத்துக்
கண்டாரை ** கடல்மல்லைத் * தலசயனத்து உறைவாரை *
கொண்டாடும் நெஞ்சுடையார் * அவர் எங்கள் குல தெய்வமே 4

1102 பிச்சச் சிறு பீலிச் * சமண் குண்டர் முதலாயோர் *
விச்சைக்கிறை என்னும் * அவ்விறையைப் பணியாதே **
கச்சிக் கிடந்தவனூர் * கடல்மல்லைத் தலசயனம் *
நச்சித் தொழுவாரை * நச்சு என்தன் நல்நெஞ்சே! 5

1103 புலங்கொள் நிதிக்குவையோடு * புழைக் கைம்மா களிற்றினமும் *
நலங்கொள் நவமணிக்குவையும் * சுமந்து எங்கும் நான்றொசிந்து **
கலங்கள் இயங்கும் மல்லைக் * கடல்மல்லைத் தலசயனம் *
வலங்கொள் மனத்தார் அவரை * வலங்கொள் என் மட நெஞ்சே! 6

1104 பஞ்சிச் சிறு கூழை * உருவாகி மருவாத *
வஞ்சப் பெண் நஞ்சுண்ட * அண்ணல் முன் நண்ணாத **
கஞ்சைக் கடந்தவனூர் * கடல்மல்லைத் தலசயனம் *
நெஞ்சில் தொழுவாரைத் * தொழுவாய் என் தூய் நெஞ்சே! 7

1105 செழுநீர் மலர்க் கமலம் * திரை உந்து[2] வன்பகட்டால் *

[1] வரங்

உழுநீர் வயல் உழவர் உழப் * பின் முன் பிழைத்து எழுந்த **
கழுநீர் கடி கமழும் * கடல்மல்லைத் தலசயனம் *
தொழுநீர் மனத்தவரைத் * தொழுவாய் என் தூய் நெஞ்சே! 8

1106 பிணங்களிடு காடு அதனுள் * நடமாடு பிஞ்ஞகனோடு *
இணங்கு திருச்சக்கரத்து * எம்பெருமானார்க்கு இடம் ** விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக் * கடல்மல்லைத் தலசயனம் *
வணங்கும் மனத்தார் அவரை * வணங்கு என்தன் மட நெஞ்சே! 9

1107 * கடி கமழும் நெடுமறுகில் * கடல்மல்லைத் தலசயனத்து *
அடிகள் அடியே நினையும் * அடியவர்கள் தம் அடியான் **
வடிகொள் நெடுவேல் வலவன் * கலிகன்றி ஒலி வல்லார் *
முடிகொள் நெடுமன்னவர் தம் * முதல்வர் முதல் ஆவாரே 10

**அடிவரவு:** நண்ணாத பார் ஏனத்தின் விண்டாரை பிச்சம் புலம் பஞ்சி
செழுநீர் பிணங்கள் கடி திவளும்

---

[2] உந்த